2023 ஜனவரி 13]

பேரூராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்கள் அனைத்து விதமான பதிவுப் பணிகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். 125 ஆண்டுகளைக் கடந்து செயல்பட்டு வரும் பரங்கிப்பேட்டை சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடத்தையும் தாங்கள் கவனத்தில்கொண்டு, கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 100 ஆண்டுகளுக்கும் மேலான கட்டடங்கள் ஏறத்தாழ 150 இருக்கின்றன. இந்த ஆண்டு 50 கட்டடங்கள் கட்டுவதற்கு எடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே 28 கட்டடங்களுக்கான* estimate *பொதுப் பணித் துறைமூலம் இன்றைக்கு பெறப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 22 கட்டடங்களுக்குப் பொதுப் பணித் துறையிடமிருந்து அதற்கான* estimate *பெறப்படவிருக்கிறது. எனவே, மூப்பு அடிப்படையிலே, படிப்படியாக, 100 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள அந்தக் கட்டடங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு.* T.K. *அமுல் கந்தசாமி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

29—

கல்வி நிறுவனங்கள்

***12048—திரு. T.K. அமுல் கந்தசாமி:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, ஆனைமலை வட்டம், அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயிலின் சார்பாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

[2023 ஜனவரி 13

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் கோருகின்ற மாசாணியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம் இல்லை. அதோடுமட்டுமல்லாமல், ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட கல்லூரிகள் தொடர்பாக நீதிமன்றத்திலே 5–11–2022 ஆம் நாளிட்ட உத்தரவின்படி, அறங்காவலர் குழு முழுமையாக அமைக்கப்பட்டு, அதன் பிறகு அறங்காவலர் குழுவின் ஒப்புதலோடு, நீதிமன்ற உத்தரவினைப் பெற்றுத்தான் கல்லூரிகள் தொடங்கப்பட வேண்டுமென்று தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, தற்போதைய சூழ்நிலையில், மாசாணியம்மன் திருக்கோயில் சார்பாகக் கல்லூரி தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்றாலும், வருங்காலத்தில் அதற்குண்டான சாத்தியக்கூறுகள் அமைகின்றபோது நிச்சயமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் இடைக்கால பொதுச் செயலாளர், அருமை அண்ணன் எ டப்பாடியார் அவர்களையும், எதிர்க்கட்சிக் கொறடா, என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கக்கூடிய அருமைச் சகோதரர், முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்குகிறேன். இந்த அவையில் அமர்ந்திருக்கக்கூடிய அனைத்து உறுப்பினர்களுக்கும் என்னுடைய ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளை உரித்தாக்குகிறேன்.*

எனது வால்பாறை தொகுதிக்குட்பட்ட ஆனைமலை வட்டத்தில் இருக்கக்கூடிய மிகவும் பிரசித்தி பெற்ற மாசாணியம்மன் திருக்கோயிலைச் சுற்றியும் நிறைய தனியார் தங்கும் விடுதிகள்

2023 ஜனவரி 13]

உள்ளன. அந்த விடுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரானது கோயில் அருகிலுள்ள உப்பாற்றில் கலக்கின்றது. கோயிலுக்கு வரும் பக்தர்கள் குளிப்பதற்கும், முகம், கை, கால்களைக் கழுவிக்கொண்டு சென்று அம்மனை தரிசிப்பதற்கும் மிகவும் சிரமமாக இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கல்லூரி அமைக்கப்படுமா என்று கேள்வி கேட்டுவிட்டு . . . (குறுக்கீடு) அது வேறு நிர்வாகத்தின்கீழ் வருகிறது. நகராட்சித் துறையின்கீழ் வருகிறது.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாசாணியம்மன் கோயிலைப் பற்றித்தான் கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கால்வாயைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். கால்வாயைப் பற்றிய கேள்வி என்றால், அதற்கு நகராட்சித் துறையோ, உள்ளாட்சி அமைப்புகளோதான் பதில் சொல்ல வேண்டியிருக்கும். அந்தக் கல்லூரி வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றிக் கேளுங்கள். இரண்டாவது கேள்விக்கு வாய்ப்புத் தரப்படும்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *கல்லூரி அமைப்பதற்கான இடமில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேளுங்கள்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *கல்லூரி அமைப்பது குறித்து மறுபரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அடுத்து, கோயில் திருவிழா நடைபெறும்போது, சோமேஸ்வரன் கோயில் அருகில் மயான பூஜை நடைபெறும் இடத்தில் பக்தர்கள் அமர்வதற்கு தளம் அமைத்துத் தர வேண்டும். சாலை வசதி மற்றும் குடிநீர் வசதியும் திருக்கோயில் சார்பில் அமைத்துத் தர வேண்டுமென்று தங்களின் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த உப்பாற்றில் படித்துறை அமைப்பதற்காக ரூ.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஓடைப் பகுதி நீர்வளத் துறைக்குச் சொந்தமான பகுதி என்றாலும், அதிலிருந்து 58 சென்ட் நிலம் மாசாணியம்மன் திருக்கோயில் சார்பில் புதிதாக வாங்கப்பட்டிருக்கிறது. பக்தர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அரசாக இந்த அரசு இருக்கின்றபடியால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்பதற்கு முன்பாகவே அந்த இரண்டு இடங்களையும் மேம்படுத்திட ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயிலில் நிதி அதிகமாக இருக்கின்றது. அந்தக் கோயிலுக்கு அருகில் அல்லது ஆனைமலை சுற்று வட்டாரப் பகுதிகளில் 6½ ஏக்கர் நிலம் உள்ளது. அந்த இடத்தைக் கையகப்படுத்தி ஒரு கல்லூரியை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் படித்துறை, சுற்றுச் சுவர் மற்றும் தங்கும் விடுதி அமைப்பதற்காக ரூ.12 கோடி ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால், அதற்கான பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை. அந்தப் பணிகள் எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கும் மேலாக, திருவிழாக் காலங்களில் மாசாணியம்மன் கோயில் நிகழ்ச்சிகளுக்கான அழைப்பிதழில் மக்கள் பிரதிநிதியாகிய சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர்களையும் இடம்பெறச் செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஜனவரி 13]

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோயில் நிகழ்வுகளில் அவரது பெயர் இடம்பெறுவதில்லை என்று எடுத்துக் கூறினார்கள். 99.9%, நிகழ்ச்சி நடைபெறுகின்ற இடத்தைச் சார்ந்த பகுதிகளில் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆகியோரது பெயர்கள் கண்டிப்பாக இடம்பெற வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். நீங்கள் வந்தாலும் சரி, வரவில்லையென்றாலும் சரி, துறையின் இணை ஆணையர்களின்மூலம் உங்களுக்கு முறையாகத் தகவல் தெரிவிக்கப்படுகிறது. கவனக் குறைவாக எப்போதாவது விடுபட்டுவிட்டால், வருகின்ற காலகட்டங்களில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாத வகையில் சரிசெய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–25

12 கோடி ரூபாய் ஏற்கெனவே மாசாணியம்மன் திருக்கோயிலுக்கு நிதி ஒதுக்கியதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தவறான தகவலை அவையில் பதிவு செய்யக் கூடாது. 2010 ஆம் அண்டு அந்தத் திருக்கோயிலின் திருப்பணிகள் முடிவுபெற்று கும்பாபிஷேகமும் நடைபெற்றது. தற்போது 6 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் 11 பணிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஓராண்டு நிறைவடைவதற்குள்ளாக திருப்பணிகள் முழுமை பெற்று, கும்பாபிஷேகம் நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*